# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

**THIRD YEAR EXAMINATION IN BACHELOR OF ARTS (EXTERNAL) - 2009 / 2010**
**HELD IN DECEMBER - 2010**

## TML 3.21 – LITERARY THEORY AND LITERARY CRITICISM

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவு செய்து, எல்லாமாக **ஐந்து** (5) வினாக்களுக்கு விடை தருக..

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

### பகுதி - I

01. மரபு வழி இலக்கியக் கொள்கைகள் பற்றி அறிஞர் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

02. "ஏதேனும் ஒரு இலக்கியக் கொள்கையின் அடிப்படையிலேயே இலக்கிய விமர்சனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினைத் தெளிவுறுத்துக.

03. கீழ்வருவனற்றுள் எவையேனும் **இரண்டு** பற்றிக் குறிப்பெழுதுக.

அ) ஜெக் டெரிடா (Jacques Derrida)
ஆ) மிஷேல் ஃபூக்கோ (Michel Foucault)
இ) பின் நவீனத்துவமும் பெண்ணியமும்
ஈ) நவீன இலக்கியக் கொள்கைகள்

### பகுதி - II

04. இலக்கியத்துறையிலே வாசகன் - படைப்பாளி - திறனாய்வாளன் ஆகியோரது பங்கும் பணியும் பற்றிக் கருத்துரைக்க.

05. தமிழ்த் திறனாய்வு முன்னோடிகளை இனங்கண்டு, இலக்கியத் திறனாய்விலே அவர்களது பங்கும் பணியும் பற்றிக் கருத்துரைக்குக.

06. கீழ்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினைத்** தேர்ந்து விளக்குக.

அ) பேராசிரியர் க. கைலாசபதி
ஆ) திறனாய்வு அணுகுமுறைகள்
இ) மார்க்ஸியத் திறனாய்வு

## பகுதி – III

07. கீழ்வரும் கவிதையைத் திறனாய்வு செய்க.

‘லெக்கேறி... ...ரீக்... ...கீ... ...கோ!’
என்று தெருவில்
தொலைவில் ஒருமூடை
சுமந்து நடந்துவரும்
செல்லாளின் கூவல்
தெருவெங்கும் கேட்கிறது.

அல்லயலில்
வேலி அடைப்புக்குப் பின் இருந்து
‘கொண்டாகா’
என்றொருத்தி கூப்பிட்டாள்.

போய்க் கடப்பைத்
தள்ளிவிட்டுச் சென்று
தலைச்சுமையைக் கீழிறக்கி
வைத்தாள் முருங்கை மரத்தடியில்,

வீதியெல்லாம்
அல்லாடி வந்த
அவளின் தளர்ந்த உடல்
காலை வெயிலில்
கசிந்து நனைந்துளது.
சீலைத் தலைப்பால் சிறிது
துடைத்து விட்டாள்.

சாக்கில் இருந்த
தளிர்த்த இலைக்கறியில்
தட்டில் எடுத்து வைத்தாள்
பத்து சதத்துக்கு.

‘நட்டங்கா இன்னமும்
‘நாலுபுடி வை’ என்றாள்
‘கட்டாகா’ என்றாள் கறிக்காரி.
‘எப்பயும் நீ
இப்பிடித்தான் நல்ல அறும்பு’
என்றிவள் சொன்னாள்.

‘உச்சி வெயில்ல
வயல்ல சுழியோடிப்
பிச்சிவந்து விக்கும்
புழைப்பு புள்ள என் புழைப்பு
நாளும் முழுப் பொழுதும்
நாயா அலஞ்சு
சதிரத்தைச் சாறாப் புழிஞ்சா
கெடைக்கிறது

என்னத்துக் காகும்
இரண்டு குமர் கெடக்கு…'

முந்தானையில் காசை
முடிந்தபடி எழுந்த
செல்லாளைப் பார்த்து-
திரும்பி உட் செல்லுகையில்,
'எல்லார்க்கும் கக்கிசம் தான்
என்ன செய்யலாம்' என்றாள்.

'லெக்கேறி… …ரீக்… …கீ… …கோ!'
என்று தெருவில்
தொலைவில் ஒரு மூடை
சுமந்து நடந்து செலும்
செல்லாளின் கூவல்
தெருவெங்கும் கேட்கிறது.

08. கீழ்வரும் உரைப்பகுதியைத் திறனாய்வு செய்க.

நடமாடித் திரிந்தவன் முடமாகிப் போனது புரிந்து கொள்ளப்படாத மர்மம்! சுடுகாடு, நடு இரவு. மனித எலும்புக் கூடுகளின் மத்தியில், ஆனந்தக் கூத்தாடினானே அவனையும் 'பித்தன்' என்றுதான் அழைக்கிறார்கள்.

ஆனால்! அவன்?

அவன் அவனேதான். அவனைப் பற்றித் தெரிந்துகொண்டவனும் அவனாகத்தான் இருக்க முடியும்.

அதோ அவன் வருகிறான். நொண்டி நொண்டி நடந்து வருகிறான். நகரத்தின் முக்கிய பாதை அது. வேகமும் விறுவிறுப்பும் நிறைந்த அந்தப் பாதையில் அவன் சாவதானமாக நடந்து வருகிறான். நாகரிகத்தின் உச்சநிலை அவசரமும் அகங்காரமும்தான்! என்று முடிவுக்கு வந்துவிட்ட மனிதப் பிரகிருதிகளின் மத்தியில் நிதானமாக நடந்து வருகிறான். அவசரவசரமாகப் போய் வந்து கொண்டிருக்கும் மனித நடமாட்டத்திலே, கடிவாளம் இடப்பட்ட குதிரையைப் போல தார் ரோட்டில் நின்று கையை நீட்டுகிறான். ஓடிக் கொண்டிருக்கும் ரெயில் வண்டியில் இருந்து விடுபட்ட ரெயில் பெட்டியைப் போல், அத்தனை பேரில் ஒருவன் ஒரே ஒரு மனிதன் அவன் அருகில் நின்று ஏதோ அவன் கைக்குள் வைத்துவிட்டுப் போகிறான். அவன் திரும்பவும் தன் நடையை ஆரம்பிக்கிறான். இதுதான் அவனுடைய முடிவில்லாத பிரயாணம்.

சூரியன் சுட்டெரித்துக் கொண்டிருக்கும் நடுப்பகல்; அணலைக் கக்கும் தார் ரோட்டு. இந்த இரண்டுக்கும் மத்தியிலே நிதானமாக அடியெடுத்து வைத்து நடப்பான். நடந்து கொண்டே இருப்பான். திடீரென்று ஒருநாள் பயங்கரமான காற்றும் மழையும் அடிக்கும். அப்பொழுதும் அவன் ஓட மாட்டான் ஒதுங்க மாட்டான்; அதே நிதானம்; அதே நடை! பசி இல்லை பணமும் இருந்ததில்லை அவனிடம், நோயுமில்லை, மருந்தும் தேவைப்படவில்லை, அவனுக்கு. வாழவேண்டுமென்று நினைத்தவனுமில்லை; சாவைப் பற்றிச் சிந்தித்தவனுமில்லை. பயமுமில்லை; கடவுளுமில்லை அவனுக்கு! விருப்பு

வெறுப்பற்று வாழ்க்கையின் எல்லைக் கோட்டுக்கப்பால் நின்று உலகத்தை ஏளனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

விருப்பு வெறுப்பற்றவன் ஒரு துறவிதான். என்றாலும் துறவிகள் தங்கள் உடலைப் பாதுகாத்துக் கொள்ள எப்பொழுதும் மறந்ததில்லை. ஆனால்! அவன்? பைத்தியக்காரன். இவைகள் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவன். ஆம் அவன் மனிதன்! அவனுடைய கதை?....?

***